**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 216/2023**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 24.11.2023**

| | |
|---|---|
| **Name : பாலுசாமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்பஅழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) விபத்தில் இறந்த சக்திவேல் எனது உறவினரா என்றால் இல்லை. போலிசார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் 28.09.2022–ம் தேதி விசாரித்தனர். இறந்துபோன சக்திவேல் எனது உறவினர் என்று போலிசார் விசாரணையில் பதியப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். சக்திவேல் இறந்த தகவல் யார் சொல்லி தெரியும் என்றால் நான் வங்கியில் இருந்து வெளியே வரும் போது யாரோஒருவர் அடிப்பட்டதாக அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள்.

2) போலிசார் வரைபடம் வரைந்து அந்த வரைபடத்தில் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எங்கு கையொப்பம் வாங்கினார்கள் என்றால் திப்பம்பட்டி பிரிவில் வைத்து வாங்கினார்கள். என்னை விசாரித்தனது ஆய்வாளரா, உதவி ஆய்வாளரா, காவலரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை விசாரிக்கும் போது நான் சொல்லியதை பேப்பரில் பேனாவால் எழுதிக்கொண்டனர் என்றால் சரிதான்.

3) என்னிடம் கையால் எழுதப்பட்ட வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கினரா என்றால் கம்யூட்டரில் பிரிண்ட் செய்த பேப்பரில் கையொப்பம் செய்தேன். என் முன்னிலையில் கம்யூட்டரில் பிரிண்ட் செய்யப்பட்டதா என்றால் இல்லை.

கம்யூட்டரில் பிரிண்ட் செய்த பேப்பரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) சம்பவயிடத்தில் வடக்கு, மேற்கு, தெற்கு பக்கங்களில் என்ன என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில், இறந்தவர் எனது உறவினர் என்பதால் நான் போலிசார் தயார் செய்த ஆவணங்களில் கையொப்பம் செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**